46

மாதஇதழ் • டிச '84 • 50 காசு





FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இப்படியும் ஒரு வழிகாட்டி

தெருவில் போவோர் வருவோரை நிறுத்தி ஒரு சிறுமி பணம் கேட்டுக் கெஞ்சிக் கொண்டிருந்த பரிதாபக் காட்சியை சில தினங்களுக்கு முன் காண நேர்ந்தது. இந்தத் "திருப்பணி"யை செய்ய அனுப்பியது சென்னை அண்ணாநகரில் உள்ள ஒரு பள்ளி. "50 ரூபாயை வசூலித்துக் கொடுத்தால் தான் நாடகத்தில் சேர்ப்பார்களாம்; பில்டிங் கட்டப் போகிறார்களாம்" இது அச்சிறுமி சொல்லிய தகவல்.

'டொனேஷன்' என்ற பெயரில் பெற்றோர்களிடமிருந்து கறக்கும் பணம் போதாதென்று குழந்தைகளையும் பிச்சை எடுத்து வரும்படி இப்படி ஒரு கார்டை அச்சிட்டு கொடுத்து அனுப்பி உள்ளார்கள். பணம் வசூலிக்க "இப்படியும் ஒரு வழி இருக்கிறது" என மற்ற பள்ளிகளுக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கும் இப்பள்ளியின் செயல் கண்டிக்கத் தக்கது.



I. C. I. SCHOOL
ENGLISH & TAMIL MEDIUM
Thangam Colony, Madras-40
Collection for our School Development

Name
Address

For I. C. I. School

[redacted] :

Correspondent
Head Mistress

Total Rs. 50/-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |



## (ஏ)மாற்றம்

✳இதோ!
எங்கள் நாட்டின்
இளையராஜாக்கள் - ஆனால்
இவர்களின்
கரங்களில் மின்னுவது
செங்கோல் அல்ல.
பச்சை மரகத
எச்சில் இலைகள்!

FREE E- BOOKS , www.thamizham.net.,

**கிறிஸ்துவ நாடு, இசுலாமிய நாடு, போன்று தன்னை நாத்திக நாடு என்று அறிவித்துக்கொண்ட தேசம் ஏதேனும் உலகில் உண்டா?**

உண்டு. கிரீசுக்கும்,யூகோஸ்லாவியாவுக்கும் இடையில் உள்ள குட்டி நாடான அல்பேனியா தன்னை 'நாத்திக சமதர்ம குடியரசு' என்று பிரகடனப்படுத்தியுள்ளது. இந் நாட்டில் மக்கள் தொகை 25 லட்சம் மட்டுமே. பரப்பு தமிழகத்தில் ¼!

**மறைந்த பிரதமர் இந்திரா பற்றி ஏதாவது சிறப்பாக சொல்ல முடியுமா?**

# கேட்க வேண்டிய கேள்விகள்?



யோகாசனத்தையும், இயற்கை மருத்துவத்தையும் கடைசிவரை கடைப்பிடித்தவர். மரணம் வரைக்கும் காலை 10 நிமிடங்களும் உறங்கும் முன் 10 நிமிடங்களும் யோகப் பயிற்சி செய்திருக்கிறார். எப்போதும் சுறுசுறுப்பாகவும், இளமையுணர்வுடனும் இந்திரா இருந்தார்..

**ஒரு பெண்ணின் கண்ணீருக்கு எங்கு மதிப்பு அதிகம்?**

''திரையில் ஒரு பெண் அழுதால் படமுதலாளி சிரிப்பார்'' என்பது படமொழி. அவள் விடும் ஒவ்வொரு துளி கண்ணீருக்கும் ஒரு டிக்கெட் அதிகப்படி விற்றுக்கொண்டிருக்குமாம். நிஜ அழுகைக்குச் செவி சாய்க்காதவர்கள் இந்நாட்டில் நிழல் அழுகையில் தான் உருகிப்போகிறார்கள்

**மத்திய அரசு நிர்வாகத்தில் மிகச் சீரழிந்த நிலையில் உள்ள துறை எது?**

எல்லா நிர்வாகச் சீர்கேடுகளுக்கும் சவால் விடுவது இன்று தொலைபேசித் துறை தான். நாட்டின் உயிரோட்டமான இந்தத் தகவல் தொடர்பு புற்றுநோயால் பீடிக்கப் பட்டிருக்கிறது. ஒரு தொலைபேசி என்னென்னவெல்லாம் கோளாறு செய்ய முடியும் என்பதற்கும், எவ்வளவு மோசமாக இத்துறையை நிர்வகிக்க முடியும் என்பதற்கும் உலக

FREE E- BOOKS , www.thamizham.net.,

## ஸுகாரில்

இது சக்கரையை விட 30 மடங்கு அதிகம் இனிப்பானது தேவையற்ற கொழுப்பு கலோரிகளைத் தராத ஒரு புதிய கூட்டுப் பொருள்

இது கண்டுபிடிக்கப்பட்ட சூழ்நிலை சுவையானது. இன்றைக்கு 47 ஆண்டுகளுக்கு முன் இலியனாய்ஸ் பல்கலை கழக விஞ்ஞான ஆய்வுக் கூடத்தின் மேஜையின் மீது ஒருநாள், தான் குடித்துவிட்டு வைத்த சிகரெட் மீண்டும் எடுத்து வாயில் வைத்த போது அது இனிப்பாக இருந்ததை அலட்சியமாக விட்டுவிடாமல் ஆராயத் தொடங்கினார் சுவேதா என்பவர். அவர் கண்டுபிடித்த 20க்கும் மேற்பட்ட ஸல்பாமிக அமிலத்துகள்கள் சிதறிக் கிடந்ததே அதன் இனிப்புக்குக் காரணம் என்பதை அறிந்தார். பின்னர் 'ஆப்பட்' ஆய்வகத்தில் மேற்கொண்ட நீண்டகால ஆராய்ச்சிக்குப் பின் அமெரிக்க விஞ்ஞானக் கழகம் ஸுகாரில் ஒரு சிறந்த இனிப்புப் பொருள் என்பதை ஒப்புக் கொண்டது.

இன்று உலகமெல்லாம் நீரிழிவு நோயுள்ளவர்கள் இருதயம், சிறுநீரகம், பித்தப்பை சீரழிவு உற்றவர்கள் அனைவரும் உட்கொள்வதற்கு ஏற்றதென்று ஒப்புக் கொள்ள பட்டுள்ளது. கேக்கு போன்ற இனிப்புப் பண்டங்களுக்கு யாரும் இப்போது சக்கரையைப் பயன்படுத்துவதில்லை. ஸுகாரிலைப் பயன்படுத்துவதால், இனிமேல் ரொட்டிக் கடைகளில் கிடைக்கும் கேக்குகளை உணவுப் பண்டம் போல நிறைய சாப்பிடலாம்.

—நாராயண பாரதி

ஆதாரம்: ரீடர்ஸ் டைஜெஸ்டு

நிபுணர்கள் இங்கு வந்து பாடம் கற்கலாம். பம்பாய் தொலைபேசி பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் தொலை பேசித் துறையை கேட்கிறார்: "தொலைபேசியை நாடெங்கும் பயன்படுத்தும் லட்சக்கணக்கானவர்களில் யாரேனும் ஒரே ஒரு நபரைக் கொண்டுவந்து இத்தொலைப்பேசி எனக்கு திருப்திகரமாக உள்ளது என்று மனப்பூர்வமாக கூற வைக்க முடியுமா? ஒரே ஒரு நபர்..." சீ நாக்கைப் பிடுங்கிக் கொண்டு... தொலைபேசி கடைகளிலும், அலுவலகங்களி லும் வீடுகளிலும் ஓர் அழகு சாதனமாகவே பயன்படுகிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது பால் மருத்துவம்

✷ நல்ல சத்துணவுப் பண்டங்களை உடல் நலத்துடன் இருக்கும்போது தான் உண்ண முடியும். உடல் நலம் கெட்ட நிலையிலும் மருந்தாகவும், உணவாகவும் உண்ணக் கூடியது பாலாகும்

✷ உடலுக்குத் தீங்கு தரக்கூடிய எந்தப் பொருளும் பாலில் இல்லை.

**தாய்ப்பால்:** உலகிலேயே இதற்கு நிகரான பாலே இல்லை. உணவே செல்லாமல், பலவீனமான நிலையில் உள்ளவர்களுக்குப் புத்துயிர் அளித்து, மரணத்திலிருந்து அவர்களைக் காக்க தாய்ப்பால் உதவும்.

**பசுவின் பால்:** தாய்ப்பாலுக்கு அடுத்த சிறப்புடையது இது. உடல் குளிர்ச்சி, மலச்சிக்கல் அகற்றல், மூலநோய் தணித்தல், உடலில் சேரும் நச்சுப் பொருட்களை வெளியேற்றல் இதன் மருத்துவப் பண்பாகும்.

**ஆட்டுப்பால்:** நீரிழிவு நோய்க்கும், சிறுநீரகக் கோளாறுக்கும் இப்பால் மிகவும் நல்லது.

**குதிரைப்பால்:** இதில் கொழுப்பு சத்தில்லை; குளிர்ச்சி உண்டு. உடல் நல்ல வனப்பும் பொலிவும் பெற இதனைப் பருகலாம்.

**கழுதைப்பால்:** எல்லாவித சரும நோய்களையும் அகற்றும் ஆற்றல் இதற்குண்டு. நிறைய சத்துக்கள் உடை-யது. நுரையீரல் சம்மந்தப்பட்ட நோய்களுக்கு இது நல்ல மருந்தாகும்.

**யானைப்பால்:** நல்ல ஊட்ட சத்து உள்ள இது உணர்ச்சிகளைக் கிளறிவிடும் தன்மையுடையது. கண்களில் தோன்றக் கூடிய பிணிகளை அகற்றும் இயல்பு இதற்குண்டு.

**குறிப்பு:** பாலை எப்போதும் கடகடவென வாய்களுள் கொட்டிக் கொள்ளக் கூடாது. நிதானமாக வாயில் துவைத்து துளித் துளியாக தொண்டைக்குள் அனுப்புவதே அதன் முழுப் பயனும் கிட்டச் செய்வதாகும்.

[அடுத்து: நமது தாமரை மருத்துவம்] —சித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

**சுட்டி சந்தா** ரூ7/- தான்! 12 இதழ்கள் அஞ்சலில் பெற பணவிடை செய்யுங்கள். எல்லாத் தொடர்புகளுக்கும் **சுட்டி** 1494 அண்ணாநகர், சென்னை-600 040.

**சுட்டி முன் இதழ்களைப் படிக்காதவர்கள்** இப்போதும் சிலவற்றைப் பெற முடியும் இதழ் எண்கள் : 1 முதல் 12, 14, 16, 17, 19, 21, 22 24 26 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். இதழுக்கு 75 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டி இன்னும் இம்மாதம் வந்து சேரவில்லை** என்று சில சந்தாதாரர்கள் மௌனமாக வருந்திக் கொண்டிராமல எங்களுக்கு வராமை பற்றித் தெரிவியுங்கள், என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது இன்னும் நிற்கவில்லை. சந்தா முடிய காலமிருந்தும் 15ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப்பெறா சந்தாதாரர்கள், சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர், முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம், வேறு வழியில்லை.

**சுட்டியை இலவசமாக அனுப்புங்கள்!** சுட்டியைக் கேள்விப் படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.


## சு. சமுத்திரத்தின்

## சமூகப்பார்வைமிக்க நூல்கள்

| | |
|---|---|
| சமுத்திரம் கதைகள் | 7-25 |
| இல்லந்தோறும் இதயங்கள் | 12-30 |
| காகித உறவு | 5-75 |
| ஒரு சத்தியத்தின் அழுகை | 6-30 |
| வளர்ப்பு மகள் | 7-00 |
| வேரில் பழுத்த பலா | 12-00 |
| உயரத்தின் தாழ்வுகள் | 6-50 |
| நெருப்புத் தடயங்கள் | 18-00 |
| புதிய திரிபுரங்கள் | 8-25 |
| ஊருக்குள் ஒரு புரட்சி (பரிசு பெற்றது) | 9-00 |

## மணிவாசகர் நூலகம்


புத்தகம் வெளியிடுவோர், 89, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600 001.
போன் : 512996


FREE E- BOOKS , www.thamizham.net.,

# மாற்று சிறுநீரகத் தேவை

மகாராஷ்டிர சட்டசபை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சிறுநீரக மாற்றிப் பொருத்தும் சட்டத்தை (Kidney Transplantation Act) விரைவில் நிறைவேற்றும் என்று மருத்துவ நிபுணர்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர். இந்த சட்டத்தின்படி ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரும் மற்றும் அதைப் போன்ற அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களும் உரிமை கோரப்படாத அனாதைப் பிணங்களிடமிருந்து சிறுநீரகங்களை அகற்றி எடுத்துக்கொள்ள உரிமையளிக்கப்படுகின்றன.

இந்தச் சட்டம் முதலில் பம்பாய் நகரில் மட்டுமே அமுல் படுத்தப்படுகிறது. எனினும் பம்பாயில் மட்டும் வருடத்திற்கு 400 பேர் சிறுநீரகக் குறை ஏற்பட்டு மாற்று சிறுநீரகம் கிடைக்காமல் இறந்து போகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



சிறுநீரகம் தானம் செய்ய முன்வருபவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே என்பதால் மாற்று சிறுநீரகம் கிடைக்காமல் இந்தியாவில் வருடத்திற்கு 30,000 பேர் இறந்து போகும் நிலை உள்ளது. மேலும் வெளி மார்க்கெட்டில் ஒரு சிறுநீரகம் ரூ. 30 000 முதல் ரூ. 50,000 வரை விற்கப்படுகிறது. அதிலும் கிடைக்காத ரத்தப் பிரிவுள்ள (Blood group) சிறுநீரகங்களுக்கு அதற்கேற்ப விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சாதாரண ஏழைகளோ நடுத்தர மக்களோ இதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

டாட்டா சமூகவியல் நிறுவனம் எடுத்த ஒரு ஆய்வின்படி இந்தியர்களில் பெரும்பாலான மக்கள் இறந்த பிறகு கூட, தங்கள் சிறுநீரகங்களை தானம் செய்யப்படுவதை விரும்புவது இல்லை. இத்தகைய நிலையில் இந்த சட்டம் எல்லா மாநிலங்களிலும் அமுல்படுத்தப்படுவதின் மூலம் இப்பிரச்னை பெருமளவு தீர்க்கப்படும் என மருத்துவ

FREE E- BOOKS , www.thamizham.net.,

## பள்ளிகளின் அவல நிலை

மாநகராட்சி பள்ளிகளில் நடக்கும் சில அக்கிரமங்களை நேரில் பார்த்தவர்கள் மட்டுமே அனுபவப்பட்டிருக்கக்கூடும். அவற்றில், நான் காண நேரிட்டவைகளில் சில :—

1) படிக்கும் மாணவர்களிடம், தன் வீட்டு வேலைகளை செய்யச் செய்து, அவர்களை சம்பளமில்லாத தன் வீட்டு வேலைக்காரர்களாக நியமிப்பது.

2) மதிய சாப்பாட்டிற்குப் பிறகு வகுப்பறையிலேயே 'ஹாய்'யாகப் படுத்துக்கொண்டு, மாணவர்களை 'விசிறி' கொண்டு 'சாமரம்' வீசச் சொல்வது.

3) சத்துணவுக்கென்று, தனி நபர்கள் இருந்தும், மாணவர்களை பாத்திரம் கழுவச் சொல்வதும், தண்ணீர் இழுக்கச் சொல்வதும், (சிறுவர்கள், 'தண்ணீர்' இழுக்கும் போது 'விழுந்து விடுவார்களோ' என்ற பயம் பார்வையிடும் நமக்கு ஏற்படுகிறது!)

4) தேர்வின் போது 'வினாத்தாளை' கொடுத்து விட்டு 'கடனே' என்று 'பத்திரிகைகள்' படிப்பது. (வினாத்தாளை' பெற்ற ஒரு மாணவன், அருகிலுள்ள தன் வீட்டிற்குச் சென்று 'விடைத்தாளை' எடுத்து வருவது கண்டு திகைப்புற்றேன்!) இப்படி 'சில' அல்ல 'பல'.. இந்த லட்சணத்தில் ஒரு மந்திரி, "பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை தனியார் பள்ளிகளை விட்டு மாநகராட்சி பள்ளிகளில் சேர்க்க வேண்டும்" என்று கூறியுள்ளார். இது சாத்தியமாகுமா? —S. பாலாஜி

நிபுணர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் உயிருள்ள ஒருவரிடமிருந்து ஒரு சிறுநீரகத்தை தானமாகப் பெறுவதைவிட இறந்தவரிடமிருந்து இரண்டு சிறுநீரகங்களைப் பெற்று இருவரைக் காப்பாற்ற முடியும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படாதிருக்க தேவையான தடுப்பு நடவடிக்கைகள் இச்சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே எல்லா மாநில அரசுகளும் இச்சட்டத்தில் அக்கறை செலுத்தி ஒரு பொதுக்கருத்தை உருவாக்கி தேவையான நடவடிக்கை மேற்கொள்வது பலரை மரணத்தினின்று காப்பாற்றும். ● தகவல் : எப். வில்லியம் ஆண்ட்ரூஸ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# அநாகரிக அஞ்சலி!

நம் நாட்டில் முக்கியமான அரசியல் தலைவர்கள் இறந்துவிட்டால் கற்காலத்தைச் சேர்ந்த காட்டுமிராண்டிகள் கூட செய்திராத அளவுக்கு அநாகரீகமான, அசிங்கமான முறையில் அஞ்சலி செலுத்துவதை ஓர் உரிமையாக வளர்த்து கொண்டிருக்கிறார்கள். தலைவர் அல்லது பிரமுகர் இறந்த செய்தியறிந்த மறுகணமே போக்குவரத்துக்களை, வன்முறையில் நிறுத்திவிடுவது, கடைகளை அடித்து உடைத்து சூறையாடுவது சம்பல்நதி கொள்ளைக்காரர்களை விட கேவலமான முறையில் அராஜக செயல்களை செய்வது இதுதான் அந்த தலைவருக்கு செலுத்தும் மரியாதை, அஞ்சலி என்று செய்கிறார்கள்.

இது சரியில்லை என்பதை அனைவரும் உள்ளூர உணர்ந்தபோதும், ஆட்சியாளர்களோ, காவல் துறையினரோ, இதை கண்டிப்பது இறந்த தலைவரை அவமதிப்பதாகும் என்ற பைத்தியக்காரத்தனமான எண்ணத்தில் இச்செயல்களை அனுமதிப்பதை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அன்றாடங்காய்ச்சிகளான சிறு வியாபாரிகளின் குடும்பம் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் தவிக்கும் நிலை. திடீரென்று போக்குவரத்து துண்டிக்கப்படுவதால் அலுவலகம் சென்ற ஆண்கள், முக்கியமாக பெண்கள் பல மைல்கள் தள்ளியுள்ள வீட்டிற்கு திரும்ப படும்பாடு வீட்டில் உள்ளவர்கள் அவர்களை எதிர்பார்த்து அல்லாடி அலைமோதும் வேதனை, பள்ளி சென்ற பச்சிளங் குழந்தைகள் மைல் கணக்கில் பரிதாபமாக நடக்க வேண்டிய துன்பம், தாங்கமுடியாத வியாதி, பிரசவ வேதனை, ரத்தகாய அபாயகரமான விபத்து ஏற்பட்டவர்கள் ஆஸ்பத்திரி சென்றடைய முடியாத துயரம் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். பரிதாபமான பொதுமக்களின் மேல் திணிக்கப்படும் இந்த கொடுமையான சித்திரவதைக்கு விலை ஏது?

ஒரு சில ரௌடிக் கும்பல் செய்யும் இவ்வளவு அநாகரிக செயல்களை நியாயப்படுத்திக் கொண்டு கைகட்டியிருக்கும் பொறுப்புள்ள ஆட்சியாளர்கள், சம்பந்தபட்ட அதிகாரிகள் இதை உணரவேண்டும்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இரவு வேலைகளில் பல்லவன்

இரவு வேலைகளில், பல்லவன் போக்குவரத்திற்காக நின்று கொண்டிருப்பவர்கள் மிகவும் பரிதாபத்துக்குரிய நிலைமையை அடைகிறார்கள். அவர்கள், கடைசி பஸ் எத்தனை மணிக்கு என்று தெரிந்தும், அதில் ஏறமுடியாமல் போக நேரிடுகிறது. காரணம், பேருந்துகளின் நிறுத்தாமல் ஓட்டும் பழக்கமே! இரண்டு பேருந்துகள் (ஒரே எண்ணுள்ள) வந்தாலும், ஒருவரையொருவர் முந்திச் செல்வதில் (over-take) இருக்கும் ஆர்வம் பயணிகளை ஏற்றிச் செல்லும் கடமையில் இல்லை. அந்நேரங்களில், போக்குவரத்து நெரிசலும் அதிகம் இல்லாததால், அவர்களுக்கு இரட்டிப்பு சந்தோஷம், பேருந்தை வளைத்து, ஒடித்து எடுப்பதற்கு! அப்போது அவர்களுக்கு 'சிக்னல் தெரியாது' (White-line marking) எதுவுமே கிடையாது. ஒரே குறிக்கோள் "அந்த பேருந்தை முந்திச் செல்வது தான்" சென்ற வாரம் இந்த நிலைமைக்கு ஆளான இரண்டு பெண்கள் ஸடர்லிங் ரோடில் இரவு 10-15க்கு நிற்க, ICF செல்லும் அந்தப் பெண்களுக்கு எந்த (47A தடம் எண்) பேருந்தும் நிற்காதது கண்டு திகைப்புற்ற அவர்களை மாணவர்களான நாங்கள் ஒரு ஆட்டோ (Auto) ஏற்பாடு செய்து ICF-ல் கொண்டு விட்டோம். இப்படி கண்மூடித்தனமான ஓட்டுநர்களை சஸ்பெண்ட் செய்ய பல்லவன் அதிகாரிகள் முன் வர வேண்டும். இப்படி கடமை தவறும் அரசு ஊழியர்களாலும் அதிகாரிகளாலும் தான் அராஜகமும், அட்டூழியமும் நடக்க ஏதுவாகிறது!

—S. பாலாஜி

அவர்கள் முட்டாள் தனமாக தங்களுக்கு தாங்களே ஏமாற்றிக் கொண்டு எண்ணுகின்றபடி இது இறந்த தலைவர்களுக்கு செய்கின்ற மலர் அஞ்சலியா? மரியாதையா? இல்லை. இறந்த தலைவரின் உடலை இழுத்துப் போட்டு செருப்பால் அடிப்பதற்கு சமானம் இந்த வன்முறை செயல்கள். இதை சம்பந்தப்பட்டவர்கள் அனுமதிக்கலாமா?

—ஜயராஜ்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## எந்த ஐயத்திற்கும் பதில் - 2 ரூபாயில்!

'யாரிடம் கேட்பேன்? எங்கு போய்த் தேடுவேன்?' என்று குழம்பித் தவிக்கும் நிலை இனி யாருக்கும் வேண்டாம். மனித அறிவுக்கு எட்டிய அத்தனை துறைகளுக்கும் கூட்டு பதிலாளர் குழு நிபுணர்களைக் கொண்டு பதில் அளிக்க முயல்கிறது.

**இதுபோன்ற கேள்விகளா? அல்லது வேறு மாதிரியா? கேளுங்கள்**

* புதிதாக சிறுதொழில் தொடங்க யாரை எப்படி அணுகுவது என வழி காட்டுக
* "தனிச்சுற்றுக்கு மட்டும்" என்றுப் போட்டுப் பத்திரிகை நடத்துவது சட்டப்படி சரியா?
* 10 ஆண்டுகளாக குழந்தைப் பேறின்றி பரிதவிக்கும் எனக்கு விமோசனம் பிறக்குமா?
* வீட்டுக்காரன் வீட்டை காலி செய்யச் சொல்லி அநியாய வழிகளில் மிரட்டுகிறான். சட்டம் எனக்கு உதவுமா?
* உலகில் கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி நடக்கும் நாடுகள் எத்தனை?

**கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 விதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள். பதில்களைத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம். எழுதுக: கூட்டு பதிலாளர் குழு, 1494 அண்ணாநகர், சென்னை-600040**

வேலையற்ற இளைஞர்களே! கோழிப் பண்ணை துவக்கி நல்ல லாபம் பெறுங்கள்.

**ர. சண்முகம்** எழுதிய **"கோழி வளர்ப்பு"** நூலை வாங்கி பயன்பெறுங்கள். விலை ரூ. 11-00. தபால் செலவு தனி. V.P.P.யில் பெற எழுதுக:-

விபரங்களுக்கு

**புத்தகப் பூங்கா**

29, நல்லண்ண முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

**முனைவன்-12-மணிக்கொடி பொன்விழா மலர்**

டிசம்பர் இறுதியில் வெளிவரும்

பக்கங்கள்: 200 விலை ரூ 10-00

கே. டானியலின் புதிய நாவல்

'அடிமைகள்' (பக்கம் 340) நூலகப் பதிப்பு: ரூ. 22-00
மக்கள் பதிப்பு: ரூ. 16-00

முகவர்களுக்கு கழிவு 20%. தேவைக்கு எம். ஓ. அனுப்புக.


தொடர்பு முகவரி: **வே.மு பொதிய வெற்பன்,** 20, கோதண்டபாணித் தெரு, குடந்தை.


FREE E- BOOKS , www.thamizham.net.,

ஹரிஹரனின்

# ஹைபோதாலமஸ்

பேசுகிறேன்



ஹரிஹரன் என்னைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கவே முடியாது. ஆனால் அவன் உடலுக்குள் 24மணி நேரமும் அயராது உழைக்கும் தொழிலாளி நான். உடலின் தேவைகள் மூளையின் அந்தந்தப் பகுதிக்கு அனுப்பி இயங்க வைக்கும் அதிகாரியும் நான்தான். நான் சரிவர இயங்கவில்லை என்றால் ஹரிஹரன் தன் பசிதாகத்தைக் கூட உணர முடியாது. இந்த அரும்பணியைச் செய்யும் எனக்கு விஞ்ஞானிகள் இட்ட பெயர் தான் ஹைபோதலாம்ஸ் என்பது.

நான் ஹரி'ஹரனின் மூளையின் நடுப்பகுதியில் கீழே ஒரு சுண்டைக்காய் அளவு இருப்பேன். என்னுடைய கீழ்ப் பகுதியில் தான் என் சகோதரன் பிசுடரி ஒட்டிக் கொண்டிருக்கிறான். ஹரிஹரனின் நரம்பு மண்டலத்தை நன்கு இயங்க வைப்பதும், உடம்பின் தட்ப வெப்ப நிலையைச் சீராக வைப்பதும் நான் தான். அதனால் எனக்கே நிறைய இரத்தம் தேவைப்படுகிறது. ஏனெனில் என்னுடைய வேலை அப்படி. நரம்பு மண்டலத்தை நல்ல நிலையில் வைப்பதும், உடலின் தட்பவெப்ப நிலையைச் சீராக வைப்பதும் நானே.

இரத்தத்தின் உஷ்ணம் கால் டிகிரி அளவு அதிகமானால் கூட நான் சும்மா இருக்க மாட்டேன். உடனே நரம்புகளின் மூலமாக பிசுடரிக்குச் செய்தி அனுப்பி, தோலின் கீழே இருக்கும் லட்சக்கணக்கான வியர்வைச் சுரப்பிகளை இயங்கச் செய்வேன். வியர்வை நீரில் தோல் நனைந்ததும் அந்த அதிகப்படி உஷ்ணம் உடனே தணியும்.

இதற்கு மாறாக ஹரிஹரனின் இரத்தத்தில் சூடு குறைந்தால் உடனே அட்ரேனல் சுரப்பியை இயங்கச் செய்வேன். பின் அவனுடைய கல்லீரல் (LIVER) தன் சேமிப்பில் இருக்கும் சர்க்கரையாக எரிபொருளை விடுவிக்க உடம்பின் சூடு

# இந்திராவின் மரணமும் தமிழர்களும்



இந்திராவின் மரணத்தை ஒட்டி, இந்திய மாநில மக்கள் வெளிப்படுத்திய துக்கத்திலிருந்து தமிழர் வெளிப்படுத்திய துக்கம் மிக மிக வித்தியாசமானது. மிகமிகச் சிந்தனைக்குரியது. நான்கு பேர் தீக்குளித்து இறந்தனர்; மூன்று பேர் தூக்கிட்டு மடிந்தனர்; ஒருவர் விஷம் அருந்திச் செத்தார். ஏழு பேர், இதய அதிர்ச்சியால் இறந்தனர். ஒரிஸாவில் உள்ள கட்டாக்கில், ஒருவர் தீக்குளித்து இறந்தார். அவரும் தமிழரே. மலேசியாவில் ஒரு டீக்கடைக்காரர். தூக்கிட்டு மடிந்தார் அவரும் தமிழரே. இந்திரா பிறந்த உ.பியிலோ இந்திராவின் பூர்விக இடமான காஷ்மீரிலோ, இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் உள்ள கேரளா உள்ளிட்ட வேறு மாநிலங்களிளோ, தமிழரைப் போன்று யாரும் தற்கொலை செய்து கொண்டு விடவில்லை!

இதனைப் போலவே, ஆந்திராவில், என். டி. ராமராவ் விலக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் ஆந்திரர், என். டி. ஆரை மீண்டும் முதலமைச்சர் கட்டிலில் அமர்த்தப் பெரும் போராட்டமே, மாநிலம் எங்கும் நடத்திக் கொண்டு

---

காப்பாற்றப்படும். மேலும் உடம்பின் தண்ணீர் அளவை மிகாமலும் குறையாமலும் பார்த்துக் கொள்கிறேன்.

பொதுவாக எனக்கு நோய் நொடி எதுவும் கிடையாது. இருந்தாலும் சர்வாங்காசனம் சிரசாஸனம் இரண்டும் என்னை நல்ல நிலையில் வைக்கும் என்பதில் ஐயமில்லை.

அடுத்து : சிவராமனின் சிரணமண்டலம்

—கட்டி பாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

இருந்தனர். அப்போது, என். டி. ஆர் பதவி விலக்குதலைத் தாளாது ஒருவர் தீக்குளித்துக் கொண்டார். அவரும் தமிழரே! (1975இல் கருணாநிதி விலக்கப்பட்ட போதும், 1980இல் எம். ஜி. ஆர் விலக்கப்பட்ட போதும் தமிழர்கள் என்ன செய்தார்கள் என்பதை ஒப்பிட்டுப் பாருங்கள்).

தற்கொலையை நோக்கி ஓடும் ஒரு கூட்டத்தை எப்படி மதிப்பிடுவது? தமிழர், போர்க்குண மக்கள் அல்லர்; பொடிந்து போகும், ஒடிந்து போகும் ஒரு கூட்டத்தினர் என்பதற்கு இத்தகு தற்கொலை சரியான சாட்சியம்! அரசியல் தற்கொலைகளைத் தருமமாகவும், புகழ் தரும் கருமமாகவும், தமிழ்நாட்டு அரசியல் வாதிகள் ஆக்குவது தமிழினத்திற்கே அவமானம்!

தமிழர் வீரத்திற்கு இன்னுமோர் எடுத்துக்காட்டு. கோயம்புத்தூரில், சில ரௌடித் தமிழர்கள், இந்திரா மரணத்தை ஒட்டி, அங்கு வாழ்ந்த சீக்கியக் குடும்பத்திடம் சென்று விளையாடி இருக்கின்றனர்; குடும்பப் பெண்களைத் தீண்டியிருக்கின்றனர்; அவ்வளவு தான், அதுவரை பொறுத்திருந்த சீக்கியர் ஒருவர், 'பர்பான்' என்ற தன் குல வாளை உருவி, இரண்டு சுழற்று சுழற்றியிருக்கிறார்! அவ்வளவு தான்! வீரத் தமிழர்கள் போன இடம் புலப்படவில்லை!

இன்னுமோர் உதாரணம் : 1983 ஜுலையில் இலங்கையில், சிங்கள ராணுவ உறுதுணையுடன், சிங்களவரால் தமிழர் கொல்லப்பட்டனர்! எரிக்கப்பட்டனர், சூறையாடப்பட்டனர்; கற்பழிக்கப்பட்டனர்! தொடர்ந்து சிங்கள ராணுவமே, தமிழர் வாழும் பகுதியை எல்லாம், நிர்மூலப்படுத்திக் கொண்டிருக்கிறது. இன்றோடு பதினாறு மாதங்கள் பறந்து விட்டன . !?

அரசியல் காரணங்களுக்காகத் தற்கொலை செய்து கொள்ளும் பழக்கம், இரண்டாம் உலகப் போருக்கு முன்பு, ஜெர்மனியில் இருந்தது. அந்தக் கோழைத் தனத்தை நிறுத்த ஜெர்மனி அரசு, ஓர் அருமையான நடவடிக்கை எடுத்தது. தற்கொலை செய்து கொள்வோர் சடலத்தை முழு நிர்வாணமாக வீதி வழியே எடுத்துச் சென்று, நிர்வாணமாகவே புதைப்பது என்று அரசு, சட்டம் செய்தது. அப்புறம் ஒரு பயல், அரசியலுக்காகத் தற்கொலை செய்து கொள்ள வேண்டுமே!

—விழிப்பூட்டி

FREE E- BOOKS , www.thamizham.net.,

## அவல நிலையில்

# விவசாயத் தொழிலாளர்கள்



இந்திரா காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களின் வேத வாக்காக இருக்கும் 20 அம்சத்திட்டத்தின் 5வது அம்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலியை நிர்ணயித்துக் கொடுக்கும் சட்டத்தை கடுமையாக அமுல் படுத்த உறுதியளிக்கிறது. இது எந்த அளவிற்கு இதே கட்சியினரால் நடைமுறையில் செயல்படுத்தப்படுகிறது?

விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி கொடுக்கும் சட்டம் கடந்த 36 வருடங்களாகவே நடைமுறையில் இருந்து வந்த போதிலும் மத்திய பிரதேச அரசாங்கம் இந்த கூலியை 'வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண்'ணுடன் (Cost of living Index) இணைத்து 'புரட்சிகர நடவடிக்கை' எடுத்ததாகக் கூறிக் கொண்டது. ஒரு வருடத்திற்கு முன் தினக்கூலி ரூ 7-65 ஆக இருந்ததை ரூ 8-60 ஆக உயர்த்தியது.


ஆனால் 20 அம்சத்திட்டத்தை அமுல்படுத்த மாநில ஆளும் இ காங்கிரஸ் கட்சியினர் யாருமே தங்கள் சொந்த வயல்களில் இதை கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை. கடந்த ஆண்டு கூலி ரூ 7.65 ஆக இருந்த பொழுது இவர்கள் ரூ 3 முதல் ரூ 6 வரையே தினக்கூலி கொடுத்து வந்திருக்கின்றனர் மேலும் வேலையாட்களிடம் குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் கட்டாயப்படுத்தி வேலை வாங்கியிருக்கின்றனர். இ காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் இந்த வகையில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இதுபற்றி சட்டசபையில் கேள்வி கேட்கப்பட்ட பொழுது மாநில முதலமைச்சர் அர்ஜுன் சிங் சரியான பதில் சொல்லாமல் மழுப்பியிருக்கிறார்.

மேலும் கடந்த மார்ச் மாதம் தொழிலாளர் நல அலுவலகம் மாநிலம் முழுவதும் 7319 முறை திடீர் சோதனைகள் நடத்தியதில் ரூ 6.24 லட்சம் கூலி குறைவாக கொடுக்கப்பட்டிருந்ததும் மேலும் 1508 தொழிலாளர்களுக்கு கூலியே


FREE E- BOOKS , www.thamizham.net.,

# பிற்காலச் சோழர் எழுத்து

தமிழகத்தில் பல்லவப் பேரரசு முடிந்ததும் விஜயாலயன் முதற்கொண்டு பிற்காலச் சோழர்களின் ஆட்சி மலர்ந்தது. கூடவே, தமிழுக்கு ஒரு புதிய வரி வடிவமும் பிறந்தது. வட்டெழுத்தில் அ, ங, து, று, ஆகிய எல்லாம் ஒரே மாதிரியாகவே இருக்கும். எனவே தான் புதிய வரி வடிவம் தேவையாயிற்று. இந்தப் புதிய வரி வடிவில் சமய மறு மலர்ச்சி ஏற்பட்ட இராசராசன் காலத்தில் ஏராளமான கல்வெட்டுகளும் செப்பேடுகளும் செதுக்கப்பட்டன. தஞ்சைப் பெரிய கோவிலின் உட்சுவர்களில் இச்சோழர் எழுத்துக்களின் அழகிய வடிவினை இன்றும் காணலாம். இவ்வெழுத்துக்களே நம் காலத் தமிழ் எழுத்துக்களாக உள்ளன. பிற்காலச் சோழர் எழுத்து :—




ஸ்வஸ்தீ ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்.



—சுட்டி பாரதி

கொடுக்கப்படாதிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. இதை மாநில அரசே மே மாதம் வெளியிட்ட அரசு அறிக்கையில் ஒப்புக் கொண்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் மாநில அமைச்சரவையில் உள்ளவர்களில் 21 மந்திரிகளின் முக்கியத் தொழில் விவசாயம் என்பதாகும்.

தகவல் : எம். வில்லியம் ஆண்ட்ரூஸ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

சிறுகதை



பல வண்ணக் கொடிகள் வான் நோக்கி வசனம் பேசிக் கொண்டிருக்க அதன டியில் அமர்ந்திருந்த பிச்சைக்காரர்கள் இருவர் பல இடங்களில் கிழிந்த சட்டையுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்கள் குறுக்கே நாயும் நுழைந்து அந்த எச்சில் சோற்றை எப்படியும் ருசித்திட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தது.

இருவரும் பிடித்து இழுத்ததில் எச்சில் இலை கிழிந்து சோறு கீழே சிதறியது. இது தான் சமயம் என்று நாய் அதை தின்று முடித்தது.

இருவரும ஏமாற்றத்துடனும், சினத்துடனும் நாயை நோக்கினர். அதுவோ, வாலை குழைத்து அவர்களுக்கு நன்றி செலுத்தியது.

இப்பொழுது இருவரும் ஒரு முடிவுக்கு வந்தனர்: 'இனிமேல் இருவரும் பங்கு போட்டு கொள்ளலாம் இப்படி அநியாயமாக நாய் சாப்பிட்டு விட்டதே' என்றான் அதில் ஒருவன். மற்றொருவனும் அதற்கு சரி என்றான்.

பக்கத்தி ப கல்யாண மண்டபம். வாழை இலைகளை தொட்டியில் தான் கொட்டுவார்கள்.

## எமக்கு வந்தவை


**இலங்கையின் தேசிய இனச்சிக்கல் ஒரு பார்வை** (6.00) லோகன் ஆய்வகம், 12 வெங்கடேசபவனம், தஞ்சாவூர்.7.

**தமிழீழம்:** (கவிதைத் தொகுப்பு) (4.00) M/s ஊற்றங்கரை தமிழ் சங்கம், ஊற்றங்கரை 635 207.

**புரியும் கவிதைகள்:** (6.00)—கப. திருமதியான் M/s புக் பேங்க் ஆப் தீம்தாசா 8/74பி அவனாசி ரோடு, கோவை.641018

**ஆன்ம ஒலியம்:** (11.00)—டி. எஸ். ரவீந்திரதாஸ் M/s வந்தனா பதிப்பகம், 5A 2.வது குறுக்குச் சந்து, கங்கை அம்மன் கோயில் தெரு வடபழனி, சென்னை.600026.

FREE E- BOOKS , www.thamizham.net.,



ஒருவன் குவியலாய் இலைகளைக் கொண்டு வந்து கொட்டிவிட்டு சென்றான். இருவரும் பாய்ந்தோடி பதம் பார்த்த உணவுப் பருக்கைகளை வாயில் துருத்தினர். சற்று முன் செய்து கொண்டு ஒப்பந்தம் சாம்பலானது.

என்ன செய்வார்கள்? பசி அவர்களின் வயிறுகளை பள்ளம் தோண்டி விட்டது. மறுபடியும் அவர்களுக்குள் சண்டை! கிழிந்து கிடந்த சட்டை மேலும் கிழிந்தது. நகக் கீறல்கள் உடலில் உற்பத்தியாயின. சற்று சண்டைக்குப் பின் இருவரும் சமாதான மடைந்தனர். அப்பொழுது இருவரும் ஒரு உறுதியான முடிவுக்கு வந்தனர்.

இனி இந்தக் கொடிக் கம்பங்களின் கீழ் நாம் ஒன்று சேரக் கூடாது. ஏனென்றால் அந்த கட்சிகளின் காற்று நமக்கும் அடிக்கிறது. நாம் சண்டையிட்டு சட்டையை கிழித்துக் கொண்டால் நமக்கு யாரும் தைத்துக் கொடுப்பாரில்லை. பல வண்ணக் கொடிகள் பறந்தாலும் என்றைக்கும் நமது வறுமையின் கொடி கந்தலாகத் தான் இருக்கும் என்று ஒருவன் கூற இருவரும் பிரிந்து சென்றனர்.

—க. செல்வன்



சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்குச்செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி :—

**மைதிலி மோகன்,**

24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053


FREE E- BOOKS , www.thamizham.net.,

# நெப்போலியன்



உலக வரலாற்றுப் புத்தகத்தில் கணிசமான பக்கங்களை ஆக்கிரமித்துக் கொண்டவனும் ஏறக்குறைய உலகத்தில் பாதி பகுதியில் ஆட்சி செலுத்தியவனுமான நெப்போலியன் எல்வாறு இறந்தான் என்பதும் அவனுடைய இறப்பைப் பற்றி நிலவிய பலவேறு சந்தேகங்களும் பற்றிய குழப்பங்களை வேதியல் ஆராய்ச்சியாளர்கள் எப்படித் தீர்த்தார்கள்?

கி.பி. 1821 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் நாள் செயிண்ட் எலினா (St.Helena) என்ற தீவில் நெப்போலியன் இறந்தான். இறப்புக்குக் காரணம் அவனுடைய வயிற்றில் ஏற்பட்ட புற்றுநோய் என கூறப்பட்டது. அந்த காலத்தில் இக்காரணம் உறுதியாக நம்பப்பட்ட போதிலும் ஒருசிலர் இதனை நம்பவில்லை இதற்கு காரணம் இல்லாமல் போகவில்லை. நெப்போலியன் இயற்கையாக மரணமடையவில்லை; நஞ்சு வைத்துக் கொல்லப்பட்டிருப்பான் என நெப்போலியனுடன் வாழ்ந்த சிலர் கருதினர், ஆங்கிலேயர் சிலராலும் அவர்களின் கூலிகளாலும் தான் கொல்லப்பட்டதாக நெப்போலியனே தன் உயிலில் கூறி இருப்பதாகத் தெரிகிறது.

நெப்போலியன் நஞ்சு வைத்து கொல்லப்பட்டிருப்பனா, அல்லது இயற்கையாகவே மரணமடைந்திருப்பானா? சென்ற நூற்றாண்டில் பல வகையான நச்சுப் பொருட்கள் மனிதனுக்குத் தெரிந்திருந்தன. ஆனால், இவைகள் எல்லாம் சாப்பிட்ட சிறிது நேரத்தில் செயல் திறனை காட்ட வல்லவை. எனவே யாருக்கும் இத்தகைய நச்சுப் பொருட்களில் ஒன்றை நெப்போலியனுக்குக் கொடுத்து சாகடிக்க துணிவு ஏற்பட்டிருக்காது. மேற்கூறியவற்றிலிருந்து,

FREE E- BOOKS , www.thamizham.net.,

நெப்போலியன் நஞ்சுசாப்பிட்டு இறந்திருந்தால் அத்தகைய நஞ்சு பொருளுக்கு சில தனித்தன்மைகள் இருந்திருக்க வேண்டும். ஒன்று அந்த நஞ்சு சுவையில்லாததாக இருக்க வேண்டும். இரண்டு அது சாப்பிட்டவுடன் ஆளை பலி வாங்குவதாகவும் சிறிது சிறிதாக ஆளைக்கொள்வதாகவும் இருக்க வேண்டும் இந்த இரண்டு பண்புகளையும் கொண்ட ஒரு நஞ்சு உள்ளது. அதுதான் ஆர்சனிக் (Arsenic).

ஆனால் நெப்போலியன் ஆர்சனிக் கொடுக்கப்பட்டு தான் இறந்திருப்பான் என்பதை எவ்வாறு நிரூபிப்பது?

எனினும், நெப்போலியன் மறைந்து 140 ஆண்டுகள் கழித்து (Smith) ஸ்மித் பர்சுப்வுட் [Forshufwood] என்ற இரு அறிவியல் அறிஞர்கள் நெப்போலியன் இறப்பைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டார்கள்.


முதலில் அவர்கள் உலகிலுள்ள அனைத்து அருங்காட்சியகங்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்தனர் நெப்போலியனின் முடிகள் உங்கள் அருங்காட்சியகத்தில் இருந்தால் தெரிவியுங்கள் என்பதே! சில காலம் கழித்து வெட்டப்பட்ட சில முடிகள் அவர்களுக்குக் கிடைத்தது.

வேதியில் ஆய்வு முறைகளில் அவ்வளவு துல்லியமாக முடியில் ஆர்சனிக் இருக்கும் அளவினைக் காண இயலாது. அறிஞர்கள் அந்த முடித் தொகுதியை ஒரு அலுமினியத் தாளில் நன்றாக முடிச் சுற்றி யுரேனிய உலையில் ஒரு சில மணி நேரம் வைத்தனர் பிறகு அவற்றை எடுத்து ஆய்வு செய்ததில் [இந்த முறைக்கு Actiration Analysis என்று பெயர்] உண்மையிலேயே நெப்போலியன் தலை முடியில் அதிக அளவு ஆர்சனிக் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது சாதாரணமாக இருக்க வேண்டிய அளவிற்கு மேல் பதின்மூன்று மடங்கு ஆர்சனிக் இருந்ததென ஆராய்ச்சி தெரிவித்தது. அதோடு ஆர்சனிக் சிறிது சிறிதாக நெப்போலியனுக்கு கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் தெரிகிறது. இத்தகைய ஆராய்ச்சி அறிவியல் ஆய்வுத் துறையில் ஒரு மைல் கல்

நன்றி: 'பொதிகைத் தென்றல்'—இலக்கிய இதழ்

# இறந்தது எப்படி?...

FREE E- BOOKS , www.thamizham.net.,



# திரையுலகப் பிரமுகர்கள்:

## இயக்குநர்

# கே. பாலசந்தர்

# 5

## நகைச்சுவைப் படங்கள்

திரு. பாலசந்தரின் ஒவ்வொரு படத்தைப் பற்றியும் விமர்சித்து மதிப்பீடு செய்வது என்பது இந்த இதழில் சாத்தியமில்லை. எனவே இவரது அனைத்துப் படங்களையும் பொழுது போக்குப் படங்கள், சீரியஸான சமுதாயப் படங்கள் என்று வகைப்படுத்தலாம். பொழுது போக்குப் படங்களில் சில நகைச்சுவைப் படங்களை மட்டுமின்றி வேறு சிலவற்றையும் சேர்க்கலாம். பாலசந்தரின் பெரும்பாலான படங்களில் நகைச்சுவையும் இழையோடுகிறது என்றாலும் நகைச்சுவைக்காகவே சில படங்களை அவர் எடுத்தார். பாமா விஜயம், அனுபவி ராஜா அனுபவி, தில்லுமுல்லு, பொய்க்கால் குதிரை போன்ற நகைச்சுவைப் படங்களில் பாமா விஜயம் தான் அவருக்கு வெற்றிப் படமாக அமைந்தது.

பொருளாதார ரீதியாக திட்டமிடாத ஒரு குடும்பம் வரவு செலவுக்கேற்ப வாழ்க்கை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தும் பாமா விஜயம் வயிறு குலுங்க சிரிக்க வைக்கக் கூடியது. மறைந்த டி.எஸ். பாலையா, முத்துராமனுடன், நாகேஷ், ஸ்ரீகாந்த், ராஜஸ்ரீ, காஞ்சனா, ஜெயந்தி, மேஜர் சுந்தர்ராஜன், சௌகார் ஜானகி என்று மிக நீண்ட நடிகர் பட்டாளம் பங்கேற்ற படம் இது. இவர்களில் பெரும்பாலானவர்கள் குணச் சித்திர கலைஞர்களே. ஆனால் அவர்களையும் நகைச்சுவைப் பாத்திரத்தில் நெஞ்சில் நிடிக்கத்தக்க வகையில் சோபிக்க வைத்தது அப்போதைய திரையுலகில் பாலசந்தருக்கு புதிய வரவேற்பை தேடிக் கொடுத்தது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

நாகேஷ் இரட்டை வேடத்தில் நடித்த படம் அனுபவி ராஜா அனுபவி. இதிலும் மேஜர் சுந்தரராஜன் ராஜஸ்ரீ, முத்துராமன் ஆகியோரும் மனோரமா, ஒ. ஏ. கே. தேவர் போன்றோரும் நடித்தார்கள். ஆனால் பாமா விஜயம் போல் இது பாலசந்தருக்கு கை கொடுக்கவில்லை.

எந்த விஷயமானாலும் பந்தயம் கட்டி மற்றவர்களை சவாலுக்கு அழைக்கும் வாலிக்கும், அவரது பெண்ணை காதலித்து மணமுடித்தே தீருவேன் என்று அவரிடமே சவால் விடும் இளைஞனுக்கும் இடையே நடக்கும் போராட்டம் தான் பொய்க்கால் குதிரை. தோல்விப் பட்டியலில் இதுவும் சேர்ந்தது.

நகைச்சுவை படங்களில் எதிர்பார்த்த பணவசூல் கிடைக்கவில்லை என்றாலும், வெற்றிபடமாக ஓடவில்லை என்றாலும் 'நான் அவனில்லை' உண்மையிலேயே வித்தியாசமான படம் தான். ஒரே ஒரு நபர் பல இடங்களில் பல பெயர்களில் உலவி பல பெண்களை ஏமாற்றி காதலித்து இறுதியில் கையும் களவுமாகப் பிடிபடும் ஆசாமியாக ஜெமினி தன் முழுத் திறமையையும் காட்டி நடித்த படம் இது. ஆனால் கதையை அதன் இயல்பான போக்கிற்கு விடாமல் டைரக்டர் இடையில் புகுந்து கதாநாயகனை சுட்டுத் தள்ளி Anti-Climaxஐ உருவாக்கி விடுகிறார். ஒருவன் கொல்லப் படுவதற்கு முன் வாசகர்களுக்கோ ரசிகர்களுக்கோ வெறுப்பு இருக்க வேண்டும். அல்லது மரணம் தவிர்க்க முடியாததாகவும், இயல்பாகவும் இருக்க வேண்டும். இப்படத்தில் ஜெமினியின் பாத்திரம் மீது ரசிகர்களுக்கு ஆர்வமும், கெட்டிக்காரன் என்று பாராட்டு உணர்வும் தோன்றி விடுகிறது. எனவே வேண்டுமென்றே கொல்ல படுவதை அவர்கள் ஏற்க மாட்டார்கள். இப்படம் தோல்வி அடைந்ததற்கு செயற்கையான இம்முடிவே காரணம்.

தில்லுமுல்லு இந்தி கோல்மாலின் நகல். தனது பாணியில் பாலசந்தர் இதை எடுத்திருந்தாலும் பாமாவிஜயம் மாதிரி கூட இது வெற்றிப் படமாகவில்லை. கோல்மால் நாயகன் அமோல் பலேகருக்கும், தில்லுமுல்லு நாயகன் ரஜினிகாந்திற்கும் நிறைய இடைவெளி இருந்ததும், பாடல்கள் கொஞ்சம் சோபிக்காமல் போனதும் காரணமாக இருக்கலாம்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஏனைய இதர படங்களைப் போலவே தன்னால் நகைச் சுவை படங்களையும் எடுக்க முடியும் என்பதை பாலசந்தர் நிரூபித்த போதும் மக்கள் அவைகளை ஏற்க மறுத்து விட்டார்கள். இதற்குக் காரணம் ஒருவரிடம் பிரதான மாக ஒரே திறமையைத் தான் அவர்கள் எதிர்பார்க்கிறார் கள். கமலுக்குப் பாடவும், தெரியும் என்பது உண்மையாக இருந்தாலும் அவரது நடனத்தையும், நடிப்பையும் மட்டுமே ரசிகர்கள் வரவேற்கிறார்கள். டி. எம். சௌந்தரராஜனுக்கு நடிக்கவும் தெரியும் என்பது நிரூபணமானாலும் அவர் பாடுவதையே நேயர்கள் விரும்புகிறார்கள்.

பாலசந்தர் விஷயத்திலும் அப்படித்தான். ஆரம்பத்தில் மேஜர்சந்திரகாந்த், நீர்குமிழி, சர்வர் சுந்தரம் போன்ற படங்களை அளித்த பாலசந்தரிடமிருந்து அனுபவி ராஜா அனுபவியையோ, அரங்கேற்றம், அவள் ஒரு தொடர்கதை புன்னகை போன்ற படங்களை எடுத்த பாலசந்தரிடமிருந்து நான் அவனில்லையையோ, நிழல் நிஜமாகிறது, தப்புத் தாளங்கள் போன்ற படைப்புகளை அளித்த பாலசந்தரிட மிருந்து தில்லுமுல்லுவையோ - தண்ணீர் தண்ணீர், நூல் வேலி போன்றவைகளின் காரண கர்த்தாவிடமிருந்து பொய்க்கால் குதிரையையோ மக்கள் எதிர்பார்க்கவில்லை.

பாலசந்தரே ஒரு முறை சொன்ன மாதிரி இவை வெற்றி பெற்றாலும் ஆத்ம திருப்தியை அளிப்பதில்லை:-


"நான் ஏதாகிலும் பரிசோதனை முறையிலோ-அல்லது அலட்டிக் கொள்ளாமல் ஒரு மாறுதலுக்காகவோ இத்தகைய இலகுவான நகைச்சுவையான படங்களை எடுக்கிறேன். ஆனால் ரசிகர்களோ உங்களிடமிருந்து சீரியஸான படங்களைத் தான் நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம், நீங்கள் அப்படித் தான் எடுக்க வேண்டும். இந்த மாதிரி மலிவான நகைச்சுவைப் படங்களை ஆதரிக்க மாட்டோம் என்றும் எனக்குக் கடிவாளம் போட்டு விடுகிறார்கள்."

மக்கள் எதிர்பார்த்து வெளிவந்துள்ள சீரியஸான படங்கள் எப்படியிருந்தன? அவைகளையும் மக்கள் ஏற்றார் களா? என்பதை பரிசீலிக்க வேண்டியது அவசியம்.

—டி. எஸ். ரவீந்திரதாஸ்

●(தொடரும்)●

FREE E- BOOKS , www.thamizham.net.,



## நாவலாசிரியர்

# நீல.பத்மநாபன்

## பேட்டி

**ஒரு எழுத்தாளனின் கடமை என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?**

தன்னை வெளிக்கொணர்வது என்பது எல்லா மனிதர்களையும் - குறிப்பாய் கலைஞர்களை செயலாற்ற தூண்டுகிறது. நாட்டில், வீட்டில், தன்னைச் சுற்றிய உலகில் திகழ்பவை..சில அவனில் உருவாக்கும் மனப்பதிவுகள், அவன் படைப்புக்களில் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன. அவன் உட்பட்ட மனிதர்கள் பாத்திரங்களாகி அகமும் புறமும் சட்டை உரிக்கப்பட்டு காலரீதியில் கவனிக்கப் படவும் கூடும் இதையெல்லாம் செய்யும் போது எழுத்தாளன் கடுமையான வண்ணக் கலவைகளை வாரி இறைத்துவெறும்பொய்யான உலகை உருவாக்க முயலாமல், உண்மைக்கு முதலிடம் கொடுத்து சத்திய சாந்தமாக காரிய கௌரவமாக செயல்படத் துணிய வேண்டும். இது தான் இன்றைய எழுத்தாளனின் கடமையாகும்.

**சிறுகதை, நாவல்களுக்கான கருவை சம்பவங்களை நீங்கள் எப்படி தேர்ந்தெடுக்கிறீர்கள்?**

கதை, நாவல்களுக்காக கருவை சம்பவங்களைத் தேடி நான் ஒரு போதும் அலைவதில்லை. நம்மைச் சுற்றிய வாழ்வில்எத்தனையோ நடைபெறுகிறது. இதய வீணையின் இழைகள் இழுத்துக் கட்டப் பட்டிருப்பதால் சின்னச் சின்ன அசைவுகள் கூட பெரிய பாதிப்பை ஏற்படுத் துகின்றன. அவைகளை ஒதுக்கவும், மறக்கவும் முயல்வேன். அதை மீறி இறுக்கமாய் கவ்விக் கொண்டிருப்பவை என்னை அறியாமல் இறங்கி விடுகின்றன/வருகின்றன.

**உங்களுக்குப் பெயர் வாங்கித் தந்த நாவல்களில் ஒன்றான 'பள்ளி கொண்டபுரம்' நாவலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி உதயமாயிற்று?**

'தலைமுறைகள்' நாவலில் நான் பிறந்து வளர்ந்த ஒரு சமுதாயம் இடம் பெற்றிருந்தது. தலைமுறைகளுக்குப் பின் எனக்கு நன்றாய் தெரிந்திருந்த ஒரு நகரை நாயக

FREE E- BOOKS , www.thamizham.net.,



மாக்கி நாவலொன்று படைக்க வேண்டுமென்று எண்ணினேன். அதன் விளைவே "பள்ளி கொண்டபுரம்".

**நீங்கள் வேறு மாநிலத்தில் வசிப்பதால் இங்குள்ள பத்திரிகைகள் உங்களை அந்நியப் படுத்துகிறதா?**

எழுத்தாளனுக்கும் வாசகர்களுக்கும் இடையில் இயங்குபவை பத்திரிகைகள். எல்லா எழுத்தாளனுக்கும் அவன் அகத்தை வெளி காட்ட சொந்தமாய் பத்திரிகை துவங்க முடியாது. வெளி மாநிலங்களில் வாழ்ந்திருந்தாலும் வெறும் வியாபார கவர்ச்சியுடன் எழுதுகிறவர்களை சுவகரித்துக் கொள்ளும் அளவிற்கு ஏனையோர்கள் கவனிக்கப்படுவதில்லை.

**மலையாள இலக்கிய வாதிகள் தமிழகத்து இலக்கிய வாதிகள் பற்றி என்ன நினைக்கிறார்கள்?**

மயைாளத்தில் பிரபல பத்திரிகைகளிலும் எல்லா வித சோதனைகளுக்கும் இடம் தருகிறார்கள். நம்மவர்கள் ஒருவேளை, பிரபலமானவர்களுக்கு இடம் தந்தாலும் புதியவர்களுக்கு அதிகமாய் வாய்ப்புகள் தருவதில்லை. எனவே மலையாள இலக்கியவாதிகள் நம் இலக்கியம் ஒரு மந்த நிலையில்-கட்டுப் பெட்டித்தனத்துடன் இயங்குவதாய் குற்றம்சாட்டுகிறார்கள்.

**சமீபத்தில் பிறமொழியில் வெளி வந்த உங்களைக் கவர்ந்த நூல் பற்றி...**

சமீபத்தில் ஒரு பிரபல மலையாள வாரப் பத்திரிகையில், ஞானபீட பரிசு பெற்ற வங்க மொழி பெண் எழுத்தாளர் ஆசா பூர்ணா தேவியின் "பிரதம பிரதி சுருதி" என்ற வங்க நாவலின் மலையாள மொழிப் பெயர்ப்பை தொடராய் வாசிக்க நேர்ந்தது ஒரு மறக்க முடியாத அனுபவம். பல இடங்களில் உள்ள நெகிழ்வு, விழிகள் கலங்க, "சத்யா" என்ற அந்த பாத்திரம்-இப்படி ஒரு நாவலை படைக்க வாழ்வை எத்தனைக்கு நுணுகி நோக்கும் பக்குவம் வேண்டும்! இப்படி நல்ல ஒரு நாவல் நம்

FREE E- BOOKS , www.thamizham.net.,

மொழியில் வர நாம் எத்தனை காலம் தவம் செய்ய வேண்டுமோ! மலையாளத்தில் நயம் குன்றாமல் மொழிபெயர்த்ததுபோல் இந்நாவல் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டாலே நம் மொழிக்கு பெருத்த சேவையாக இருக்கும்.

ஒரு எழுத்தாளன் என்கிற முறையில் உங்களுக்கு வேதனை தரக் கூடிய விஷயங்கள் ஏதாவது...?

மலையாளத்தில் மொழிபெயர்த்து அளித்தால் எளிதில் வெளியாகி பிரபல மலையாள விமர்சகர்களின் பாராட்டும் பெறுகிறது. என்ன தான் ஊரார் புகழ்ந்தாலும் சொந்த வீட்டில் ஒதுக்கப்படும் போது உதாசீனப்படும் போது தாங்கிக் கொள்ள கஷ்டமாக இருக்கிறது.

—சி. இரகுராமன்

## அந்நியமாதல்

இங்கு...
டாக்டர்களுக்கு
தீண்டத்தகாததாக
கிராமங்கள்...
தலைவர்களுக்கோ
அமெரிக்காவிலிருந்தும்
வருகிறார்கள்
டாக்டர்கள்...

— பூவி

## அதுவே போதும்!

உங்கள்
தலைவரின் சவத்தை
சந்தனக்கட்டையில்
வேண்டுமானாலும்
எரித்துக்கொள்ளுங்கள்!
ஆனால்,
வாக்களித்த எங்களின்
அடுப்புகளுக்கு
அரளிக்குச்சிகளையாவது
அள்ளித்தாருங்கள்!

—பழ. சந்திர சேகரன்


## சென்னைக்குப் பெருமை சேர்ப்பவை

✳ உலகத்தின் 2-வது அழகிய கடற்கரை ✳ ஆசியாவின் மிகப்பெரிய ரயில்பெட்டி தொழிற்சாலை
✳ ஆசியாவின் 2-வது பெரிய படப்பிடிப்பு நிலையம்.
அத்துடன் இந்தியாவின் மிகச்சிறந்த போஸ்டர் அச்செழுத்து தயாரிப்பாளர்கள்—

### ரங்கா டைப் பௌண்ட்ரி

சென்னையில் எல்லாவித அச்செழுத்துக்கள், அச்சக உபகரணங்கள் வாங்க [illegible] இடம் இது தான். தொடர்பு கொள்க :- 78, [illegible] சாலை, வேப்பேரி, சென்னை-112.
பேசி : 37999, 661293.


FREE E- BOOKS , www.thamizham.net.,



# பிளாஸ்டிக் தொழில் பணியாளர்கள்

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் பெரும் பான்மையானவை பிளாஸ்டிக்கிலேயே வந்து விட்டன. உலோகப் பொருட்களை விட விலை குறைவாலும், கனமின்மை, வசதி முதலிய சௌகரியங்களாலும் மக்கள் இவைகளை விரும்பி வாங்குவதால் அனேகப் பொருட்கள் பிளாஸ்டிக்கிலேயே வந்து விட்டன. பெரிய நிறுவனங்கள் பயன்படுத்தும், டிரம், கேன் முதலிய பெரிய பொருட்களிலிருந்து குங்குமம், கண் மை டப்பாக்கள், விளையாட்டுப் பொருட்கள், ஹேர்பின் முதலிய சிறிய பொருட்கள் வரை பிளாஸ்டிக்லேயே பல வண்ணங்களில், அழகிய வேலைப்பாடுகளோடு செய்யப்பட்டு விற்கப்படுகின்றன.

ஆனால் இவைகளைத் தயாரிக்கும் தொழிலாளர்களின் நிலையைப் பார்த்தால் மிகவும் பரிதாபமான நிலையில் உள்ளது. இந்தத் தொழில் செய்பவர்களில் தொண்ணூறு சதவிகிதத்தினர் இளைஞர்களே. இவர்களை இன்ஜக்ஷன் மோல்டர்கள் மற்றும் ப்ளோ மோல்டர்கள் என்று அழைப்பர். முப்பது அல்லது முப்பதைந்து வயதிற்குமேல் இவர்களால் இந்த வேலை செய்ய முடியாது. அவ்வளவு கடினம். பத்து ஆண்டுகள் தொடர்ந்து வேலை செய்பவன் அதற்குமேல் செய்ய முடியாமல் சக்தி இழந்து விடுகிறான். மோல்டிங் மிஷினில் இருக்கும் ஹாண்டில்களை கைகளாலும், கால்களாலும் தொங்கிய படியே அழுத்தவேண்டும். மிஷின் பாரலில் கம்பி சுற்றப்பட்டு மின்சாரம் இணைக்கப்பட்டிருப்பதால் கம்பிகள் பழுத்து, அனல் மிஷின் ஓட்டுபவரின் மார்பைத் தாக்கும். இப்படி தொங்கி தொங்கி அழுத்தியதன் விளைவாக இவர்களில் பெரும்பாலானவர்களின் மார்பு மேல்புறம் கூடுபோல் வெளித் தள்ளியிருக்கும். பிளாஸ்டிக்குகளில் பி.வி.சி, டெல்ட்ரின் போன்ற மெட்டீரியல்களை உருக்கி பொருள் தயாரிக்கும் போது ஏற்படுகின்ற நெடி டி.பியை

FREE E- BOOKS , www.thamizham.net.,

உண்டுபண்ணும் தன்மையானது. ஆனால் அந்த நெடியிலும் இருமி இருமி அவர்கள் வேலை செய்வதைப் பார்க்க வேதனையாயிருக்கும். உருகி வருகின்ற பிளாஸ்டிக் அச்சுக்குள் பாய்வதால் தொடர்ந்து கால் மணி நேரம் வேலை செய்வதற்குள் அச்சு சூடாகி தொட முடியாத அளவிற்கு ஆகிவிடுகிறது. அவ்வளவு சூடான அச்சை வெளியே எடுத்து, பிரித்து பிளாஸ்டிக் பொருளை வெளியே எடுத்து, மீண்டும் அதை மூடி உள்ளே வைப்பதற்குள் அவர்களின் கை பழுத்து விடுகிறது. கடினமாக அழுத்துவதாலும் அச்சு சூடு பாதிப்பதாலும் இவர்களின் உள்ளங்கை காய்ப்பு ஏறி கட்டை போலாகி விடுகின்றது.

சென்னையிலும் மற்றும் முக்கிய நகரங்களிலும் இந்த பிளாஸ்டிக் கம்பெனிகள் இருக்கின்றன. சென்னையிலும் ஏறத்தாழ நூற்றுக்கும்மேல் சந்துபொந்துகளிலெல்லாம் இருக்கின்றன. இந்த மோல்டர்கள் அனைவருக்குமே 'பீஸ்ரேட்'டில் தான் சம்பளம். பதினைந்து ரூபாய்க்கு மேல் சம்பாதிக்க முடியாது. கரெண்ட் இல்லாவிட்டாலோ, மார்கெட்டில் பிளாஸ்டிக் பவுடர் கிடைக்காவிட்டாலோ இவர்களுக்கு வேலையில்லை அந்நாட்களில் கூலியுமில்லை. பத்தாண்டு அல்லது பனிரண்டு ஆண்டுகாலம் வேலை செய்துவிட்டு வலுவிழந்து, சலித்துப்போய் வெளிவரும் ஒரு தொழிலாளியின் கையில் அந்த வாரக் கூலியைத் தவிர வேறொன்றும் இருப்பதில்லை. தங்களையும், எதிர்காலத்தையும் கெடுத்துக் கொள்ளும் இந்த உதிரிப் பாட்டாளிகள் ஒருங்கிணைந்தாலொழிய இவர்கட்கு ஒரு நியாயம் கிடைக்காது. இணைக்கும் முயற்சியை இங்குள்ள தொழிற்சங்கங்கள் மேற்கொள்ளுமா?

பா - தங்கராஜ்

பாகிஸ்தானில் அரசியல் வாதிகள் அவசரம் அவசரமாக தாடி வளர்க்க வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் தன்னை ஒரு இஸ்லாமிய நாடு எனப் பிரகடனபடுத்தி, இஸ்லாமிய மரபுகளின் படி நடக்க வேண்டும் என்பதற்காக, அரசாங்கம் ஒரு குழுவை நியமித்துள்ளது.

—எம். பி. இளங்கோ

FREE E- BOOKS , www.thamizham.net.,



## தூக்கு மேடையில்

# தோழன் பகத்சிங் 4



பகத்சிங் விஷயத்தில் மட்டுமல்லாமல், பொதுவாகவே இந்திய அரசியலில், காந்தியின் வருகைக்குப் பின்னால், ஆங்கிலேயர்களை விட அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தீவிரவாத இயக்கத்தினர் தாம்!

கோபால கிருஷ்ண கோகலேயின் மிதவாத அரசியலை மெல்ல மெல்லக் கைகழுவி விட்டு, 1908ஆம் ஆண்டுக்குப் பிறகு, மக்கள் கூட்டம், திலகரின் தீவிரவாதத்தில் அணி சேரத் தொடங்கியது! 1910களில், திலகரையும் தாண்டி, ஆயுதப் புரட்சியில் நம்பிக்கை கொண்ட இளைஞர்களும் உருவானார்கள்.

1914ஆம் ஆண்டு, "கோம காதா மாரு" என்னும் கப்பல் கரையைத் தொட்ட போது, இந்திய வீரர்களுக்கும், ஆங்கில ராணுவத்தினருக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில், கல்கத்தாவின் வீதிகள் ரத்தத்தில் சிவந்து போயின.

இந்தியாவெங்கும் வாஞ்சி நாதன்களும், V. D. சாவர்கார்களும், செண்பகராமன்களும்: மதன்லால் திங்கராக்களும், ராஷ்பிகாரி கோஷ்களும் ஆயுதங்களைக் கையிலேந்தினர்.

இந்தக்கால கட்டத்திலேதான், தென்னாப்பிரிகாவிலிருந்து வந்து சேர்ந்த காந்தியின் அஹிம்சைக் கோட்பாடு, மக்களைத் திசை திருப்பி விட்டது. கோபால கிருஷ்ண கோகலேயைத் தன் அரசியல் குரு என்று சொல்லிக் கொண்ட காந்தி, மீண்டும் மிதவாதத்தைத் தூக்கி நிறுத்தினார் அஹிம்சை வழியில் போராடினால், 1921ஆம் ஆண்டுக்குள் இந்தியா சுதந்திரமடைந்துவிடும் ("India would be free by the midnight of December 31, 1921"—Gandhi) என்ற காந்தியின் வாக்கு வெகுவாக நம்பப்பட்டது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆனால், 1922ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி, மீண்டும் இந்த மண்ணின் இளைஞர்களுக்கு, வன்முறைப் புரட்சியில் ஒரு ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. புதிதாகப் புறப்பட்ட இந்தப் புயலில் இருந்து தான், சந்திரசேகர் ஆசாத், பகத்சிங், ஜதிந்திரநாத் தாஸ், பகவதி சரண், அவன் மனைவி துர்கா தேவி முதலிய நூற்றுக்கணக்கான புரட்சி வீரர்கள் புறப்பட்டு வந்தார்கள். இவர்களை உருவாக்கிய அந்தப் புயல், உத்திரப்பிரதேச மாநிலத்தில், கோரகபூர் மாவட்டத்தில், சௌரி சௌரா என்னுமிடத்தில் மையம் கொண்டிருந்தது.

பலரைச் சுட்டுக் கொன்றும், மிகப்பலரை அடித்து வீழ்த்தியும், காயப்படுத்தியும் வெறியாட்டம் நடத்திய சௌரி சௌரா போலீசாரின் அட்டூழியங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாத மக்கள், குனிந்த தலை நிமிர்ந்தார்கள். உயிருக்குப் பயந்து ஓடிய அந்த 21 போலீஸாரையும், காவல் நிலையத்திற்குள் வைத்து, உயிரோடு கொளுத்தி விட்டார்கள்.

காந்தி மிகவும் வேதனைப் பட்டார்—இறந்து போன மக்களுக்காக இல்லை; இறந்து கொண்டிருந்த அஹிம்சைக்காக; நாடு முழுவதும் நடந்து கொண்டிருந்த போராட்டத்தை வேறு தலைவர்களைக் கூட கலந்தாலோசிக்காமல், உடனடியாக நிறுத்துமாறு மக்களுக்குக் காந்தி உத்தரவிட்டார். இந்த உத்தரவு தான் இளைஞர்களைக் கோபப்படுத்தியது.

இளைஞர்கள் மட்டுமில்லாமல், மோதிலால் நேரு, C R. தாஸ் மதன் மோகன் மாளவியா போன்ற மூத்த காங்கிரஸ் தலைவர்கள் கூட, காந்தியின் இந்தச் செய்கையை மறுதலித்தனர். காந்தி மிகவும் நம்பிக்கை வைத்திருந்த ஜவஹர்லால் நேருவும் கூட, இந்தச் செய்கையை கடுமையாக எதிர்த்து அறிக்கை விட்டார்.

சிதறிக் கிடந்த இளைஞர் கூட்டம் ஒன்று சேரத் தொடங்கியது.

(தொடரும்)

— [illegible]

FREE E- BOOKS , www.thamizham.net.,



# ஜோதிடம் அறிவியலா?

வே. தமையந்திரன்

கிடைக்குமிடம் : பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி சென்னை — 600 004. விலை ரூ. 11

● ஜோதிடர்கள் குருபகவானின் குண பாவங்களை எண்ணி பலவாறு வியந்து கொண்டிருக்கும் வேளையில், அறிவியல் அறிஞர்கள் வியாழனை சிதைத்து பெரிய விண்வெளிக் குடியிருப்புகளை அமைப்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறனர் வியாழனை அகற்றிவிடுவதால் மற்ற கோள்களின் சுற்றுப்பாதை எந்தவிதத்திலும் பாதிக்கப் படாது என்று வானியற்பியல் அறிஞர்கள் கணக்கிட்டு உறுதிபடுத்தியுள்ளனர். இது மனித இனத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும், ஆற்றல் பற்றாக்குறைக்கும் தீர்வு காண உதவும் எனவும் அவர்கள் கருதுகின்றனர்.

● வானநூலின் கூட்டுப்புழு பருவமே ஜோதிடம் என்று கூறலாம். தவறான நம்பிக்கை, தவறான அடிப்படை விதிகள், சோதனைக்கு உட்படுத்தப்படாத தோற்ற உண்மைகள் முதலியவற்றால் ஆன கூட்டுக்குள் ஜோதிடம் என்ற பெயரில் வானநூல் வெகுகாலம் அடைப்பட்டுக் கிடந்தது. பல்வேறு அறிஞர்களின் முயற்சியினால் கூட்டுப்புழு முதிர்ச்சியடைந்து கூட்டை உடைத்துக்கொண்டு வான நூலாக வெளிப்பட்டது. வெற்றுக் கூட்டை சேமித்து வைப்பவர்களின் நிலையிலேயே இன்று ஜோதிடத்தை நம்புகிறவர்கள் இருக்கின்றனர்.

● ஜோதிட முறைகள் உலகம் முழுவதும் ஒரேபோல் இல்லை. கிரகங்களுக்கு கூறப்படும் விளக்கங்களும் ஒரே போல் இல்லை. ஊருக்கு ஊர் ஜோதிடருக்கு ஜோதிடர் சாதகருக்கு சாதகர் வேறுபடுகின்றது.

● புத்தகப் பிழிவு —

FREE E- BOOKS , www.thamizham.net.,

... யுரேனஸ், நெப்டியூன், புளூ டோ ஆகிய கோள்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அவையும் ஜோதிடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. (இந்தியாவில் பெரும்பாலான ஜோதிடர்களுக்கு இந்த கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதே தெரியாது). ஆனால் குறுங்கோள்கள் (Asteroids சேர்த்துக்கொள்ளப்படவில்லை. பிறகோள்களின் சந்திரன்கள் சேர்க்கப்படவில்லை. இவற்றுள் சில சந்திரன்கள் சில கோள்களைவிட பெரியவை. எடுத்துக் காட்டாக வியாழனுடைய சந்திரன்கள் கனிமீடேயும், கேலிஸ்டோவும், புதன்கோளையும், புளூட்டோவையும் விட பெரியவை. ஏன் இவற்றை எல்லாம் ஜோதிடத்தில் சேர்த்துக்கொள்ளவில்லை?

● இழப்பு, ஏமாற்றம், எதிர்காலம் பற்றிய அச்சம் முதலியன ஏற்படும் போதுதான் ஒரு மனிதன் ஜோதிடரை அணுகுகிறான். ஒரு மனிதன் எப்போது அவனுடைய சாதகத்தை ஒரு ஜோதிடரின் முன்னால் விரித்து வைக்கிறானோ, அப்போழுதே அவன் தன்னை அந்த ஜோதிடரின் முழு ஆதிக்கத்திற்கு உட்படுத்திக் கொள்கிறான். அவனுடைய அனுபவங்கள், எண்ணங்கள், தீர்மானங்கள் முதலியவற்றையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, காவலில்லா அரணைப் போல ஆகிவிடுகிறான். காவலில்லா அரணை கைப்பற்றுவது எளிது. அதுபோல எந்தவித எதிர்ப்பும் கொடுக்காமல் ஜோதிடர் கூறினவற்றை அவன் அப்படியே ஏற்றுக் கொள்கிறான். வியாபார ஜோதிடர்கள் இந்த உண்மையை நன்கு பயன்படுத்திக் கொண்டு, சாதகரின் வாய்மொழி மூலமாகவும், யூகங்களின் மூலமாகவும் உண்மைகளை அறிந்து கூறி சாதகரின் முழு நம்பிக்கையினைப் பெற்று விடுகின்றனர். இதனால் ஒரே ஜாதகத்தினை வெவ்வேறு ஜோதிடர்களிடம் காட்டினால் அவர்கள் அதைப் பார்த்து வெவ்வேறு விதமான பலன்களைக் கூறுவதை நாம் காணமுடியும்.

—சி. வி. மோகன்



FREE E- BOOKS , www.thamizham.net.,

## சுட்டி விலை ஏற்றம்

அடுத்த இதழ் முதல் (ஜனவரி 1985) சுட்டியின் விலையை 60 காசாகவும், ஆண்டுச் சந்தாவை ரூ 7 ஆகவும் உயர்த்துவது தவிர்க்க முடியாதிருக்கிறது. நாடு முழுவதும் காகித விலை ஏற்றத்தால் பத்திரிகைகள் சில மாதங்களுக்கு முன்பு விலை ஏற்றியபோதும் நாம் விலை ஏற்றத்தைக் கஷ்டத்துடன் தள்ளிப் போட்டோம். தொடர்ந்து சமாளிக்க முடியாத நிலையில் இவ்விலை ஏற்றம் செய்ய வேண்டியதை வாசக நண்பர்கள் உணர்ந்து ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம். சந்தா முடிவடையாதவர்களுக்கு மட்டும் சந்தாக் காலம் முடியும் வரை விலை உயர்வின்றி இதழ்கள் அனுப்பப்படும்.

—ஆசிரியர் குழு



ஆசிரியர்: [illegible]
[illegible], சென்னை-40


அச்சிடுவோர்: [illegible], சென்னை-2

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

1984 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WP .56

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL)



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E- BOOKS , www.thamizham.net.,